கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 90/2024**

2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 5 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெகதீசன் | வயது | 57 |
| தந்தை பெயர் | பாலகுருநாதன் | ஜாதி | |
| தொழில் | காவல் உதவி ஆய்வாளர், தாலுக்கா காவல் நிலையம், திருவாரூர் | மதம் | |
| ஊர் | திருவாரூர் - | தாலுக்கா | |

( 1, 3 முதல் 6 எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள். 2 வது எதிரி சார்பாக குவிமுச 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.)

**அரசு தரப்பு முதல் விசாரணை**

நான் தற்போது திருவாரூர் தாலுக்கா காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். எங்கள் காவல் நிலைத்தில் பணிபுரிந்த காவல் ஆய்வாளர் திரு. கருணாநிதி மற்றும் காவல் உதவி ஆய்வாளர் திரு. பாரதநேரு ஆகியோர்களின் கையெழுத்தும் கையொப்பமும் நன்கு தெரியும் என்ற அடிப்படையிலும் ஆவணங்களின் அடிப்படையிலும் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 15.01.2021 ம் தேதி காவல் உதவி ஆய்வாளர் திரு. பாரதநேரு நிலைய பொருப்பில் இருந்த போது சுகுமார் த/பெ. பக்கரிசாமி நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண். 123/2021 இதச பிரிவுகள் 147, 148, 294(b), 427, 506(2) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **( முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 4 ஆகவும் குறியிடு செய்யப்படுகிறது)** அன்றைய தினமே சாட்சிகள் சுகுமார், ஆனந்த், கணேஷ்குமார், சண்முகம், முருகானந்தம் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பார்வை மகசர் சாட்சிகள் முன்பாக சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தாயர் செய்துள்ளார். **(பார்வை மகசர் அசா.ஆ-5 ஆகவும், மாதிரி வரைபடம் அசா.ஆ-6 ஆகவும் குறீயீடு செய்யப்படுகிறது.** ) சாட்சிகளின் விசாரணையில் இருந்து சம்பவம் உண்மை என தெரியவந்ததால் எதிரிகளை தேடி வந்த நிலையில் எதிரிகள்

அரவிந்த மற்றும் கலைச்செல்வன் ஆகியோர்களை கடந்த 16.01.2021 ம் தேதி தப்ளாம்புலியூர் கடை வீதியில் குற்ற காரணம் கூறி கைது செய்து உரிய நடைமுறைக்கு பின்னர் நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தியுள்ளார். எதிரி அரவிந்த் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகள் ரமணன் மற்றும் பாலசுந்தரம் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். மேலும், மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து இவ்வழக்கின் தடயப்பொருட்களான சுமார் 84 cm நீளம் கொண்ட நெழிந்து கனுவுடன் கூடிய விறகு கட்டை - 1 கைப்பற்றியுள்ளார். (இவ்வழக்கின் சான்று பொருள் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெறாத காரணத்தினால் சான்று பொருளை குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

| |
|---|
| Typed under My dictation in Open Court read over to Witness and admitted by the witness to be correct. |

Sd/-
S. Cintha, B.A.,B.L(Hons).,
Judicial Magistrate,
Additional Mahila Court,
Tiruvarur.